# மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்

## திருநெல்வேலி – 627 012

### அனைத்து இளநிலை பட்டப்படிப்பிற்குரியது

### பகுதி – ஒன்று – பொதுத்தமிழ்

### இரண்டாம் பருவம்

### செய்யுள் பாடப் பகுதிகள்

சமய, நீதி இலக்கியங்கள்

Manonmaniam
Sundaranar University

### பல்கலைக்கழக வெளியீடு

2017-2018 முதல் சேரும் மாணவர்க்குரியது

**MANONMANIAM SUNDARANAR UNIVERSITY**

**TIRUNELVELI**

**CHOICE BASED CREDIT SYSTEM**

**PART – I POTHU TAMIL** (பொதுத்தமிழ்)

**(With effect from the Academic Year 2017-2018)**

## 2017-2018 கல்வியாண்டு முதல் நடைமுறைக்கு வரவுள்ள பொது விருப்பப்பாடத் தேர்வுமுறை (பொதுத்தமிழ் அனைத்துத் துறைப் பாடப் பிரிவினருக்கும் உரியது)

## பாடத்திட்டம்

### பாடத்திட்டத்தின் நோக்கங்கள்

1. பொது விருப்பப்பாடத் தேர்வு முறை (Choice Based Credit System) விதிகளை அடிப்படையாகக் கொண்டும், மாணவர்களின் கல்வித் தரத்தை உயர்த்தும் நோக்கிலும், எளிமையாகவும், ஆர்வத்தைத் தூண்டும் வகையிலும் கற்பிக்கும் முறையில் இக்கால இலக்கியம் தொடங்கிச் சங்கால இலக்கியம் வரை பாடத்திட்டங்கள் நெறிப்படுத்தப்பட்டுள்ளன.
2. இலக்கணப்பயிற்சி, தமிழ்மொழியை எளிமைப்படுத்தும் முறையில், பிழையின்றி எழுதவும். பேசவும் பயிற்சி பெறும் விதமாக எழுத்து, சொல், பொருள், அணி என அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
3. மாணவர்களின் நலன் கருதி இலக்கிய வரலாறு செய்யுள் அமைப்பிற்கேற்ப வகைப்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன் இன்றைய தகவல் தொடர்பு சாதனங்களின் வழி தமிழ் வளர்ச்சியை அறிந்து கொள்ளும் நிலையைத் தூண்டுதல் செய்யும் நோக்கத்துடன் பாடத்திட்டம் அமைக்கப்பட்டுள்ளது.

### பாடத்திட்டக் காலவரையறை (அனைத்து பருவங்களுக்கும் உரியது)

| பாடப்பகுப்பு | காலவரையறை |
|---|---|
| செய்யுள் | 2 மணி |
| இலக்கணம் | 1 மணி |
| உரைநடை | 1 மணி |
| சிறுகதை | 1 மணி |
| இலக்கிய வரலாறு | 1 மணி |

**MANONMANIAM SUNDARANAR UNIVERSITY**
**TIRUNELVELI**

UG COURSES – AFFILIATED COLLEGES

**Part - I Tamil**

(Choice Based Credit System)

(with effect from the academic year 2017-2018 onwards)

## பொதுத்தமிழ் - தாள் - 2

அலகு 1 : செய்யுள்பகுதி

அலகு 2 : இலக்கணம்
இவ்விரு அலகுகளும் பல்கலைக்கழகத் தொகுப்பிலிருந்து கற்பிக்கப்படும்

அலகு 3 : உரைநடை - உரைமாலை
தொகுப்பாசிரியர் - பேரா.பா.ஆனந்தகுமார்
தென்னக ஆய்வு மையம்
இராயப்பேட்டை, சென்னை – 600014

அலகு 4 : வாழ்க்கை வரலாறு - கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை
வித்துவான் செ.சதாசிவம்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்
சென்னை – 600098

அலகு 5 : நீதிநூல்களும், பக்தி இலக்கியங்களும்

1. பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் - அறநூல்கள் மட்டும்
2. பன்னிரு திருமுறைகள்
3. நாலாயிரத் திவ்யப் பிரபந்தம்

பார்வை நூல்கள் :

இலக்கணம் - இலக்கிய வரலாறு – -

1). ''நன்னூல் மூலமும் உரையும்
தமிழ் இலக்கிய வரலாறு''

முனைவர் பெ.சுயம்பு
( பாரதிபதிப்பகம்,
திசையன்விளை)

2). ''தமிழ் இலக்கிய வரலாறு''

முனைவர் மு.அருணாச்சலம்
(அருண் பதிப்பகம், திருச்சிராப்பள்ளி )

# பகுதி 1 - பொதுத்தமிழ் - தாள்-2

## இரண்டாம்பருவம்

## செய்யுள் பாடப்பகுதிகள்

## சமய, நீதி இலக்கியங்கள்

**சமய இலக்கியங்கள்**

1. சைவம் - திருஞானசம்பந்தர்

திருநாவுக்கரசர்

மாணிக்கவாசகர்

திருமூலர்.

2. வைணவம் - பெரியாழ்வார்திருமொழி

நாச்சியார்திருமொழி

பெருமாள்திருமொழி

3. கிறித்தவம் - இரட்சண்யமனோகரம்

4. இசுலாம் - குணங்குடிமஸ்தான்சாஹிபுபாடல்கள்

5. நீதிநூல்கள் -
   1. திருக்குறள்
   2. நாலடியார்
   3. இனியவைநாற்பது
   4. இன்னாநாற்பது
   5. பழமொழிநானூறு

## செய்யுள்பாடப்பகுதிகள்

## பக்திஇலக்கியம்

1. **சைவம்**

### தேவாரம்

மண்ணில்நல் லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில்நல் லகதிக்கி யாதுமோர் குறைவிலை
கண்ணில்நல் லஃதுறுங் கழுமல வளநகர்ப்
பெண்ணில்நல் லாளொடும் பெருந்தகை யிருந்ததே. (1)

போதையார் பொற்கிண்ணத் தடிசில்பொல் லாதெனத்
தாதையார் முனிவுறத் தான்எனை யாண்டவன்
காதையார் குழையினன் கழுமல வளநகர்ப்
பேதையா ளவளொடும் பெருந்தகை யிருந்ததே. (2)

அரக்கனார் அருவரை யெடுத்தவன் அலறிட
நெருக்கினார் விரலினால் நீடியாழ் பாடவே
கருக்குவா ளருள்செய்தான் கழுமல வளநகர்ப்
பெருக்குநீ ரவளொடும் பெருந்தகை யிருந்ததே. (3)

நெடியவன் பிரமனும் நினைப்பரி தாய்அவர்
அடியொடு முடியறி யாஅழல் உருவினன்
கடிகமழ் பொழில்அணி கழுமல வளநகர்ப்
பிடிநடை யவளொடும் பெருந்தகை யிருந்ததே. (4)

**திருஞானசம்பந்தர்**

## தேவாரம்

## கோயில்- திருக்குறுந்தொகை

பனைக்கை மும்மத வேழ முரித்தவன்
நினைப்ப வர்மனங் கோயிலாக் கொண்டவன்
அனைத்து வேடமாம் அம்பலக் கூத்தனைத்
தினைத்த னைப்பொழு தும்மறந் துய்வனோ. (1)

கட்டும் பாம்புங் கபாலங்கை மான்மறி
இட்ட மாயிடு காட்டெரி யாடுவான்
சிட்டர் வாழ்தில்லை யம்பலக் கூத்தனை
எட்ட னைப்பொழு தும்மறந் துய்வனோ. (2)

மாணி பால்கறந் தாட்டி வழிபட
நீணு லகெலாம் ஆளக் கொடுத்தவன்
ஆணி யைச்செம்பொன் அம்பலத் துள்நின்ற
தாணு வைத்தமி யேன்மறந் துய்வனோ. (3)

பித்த னைப்பெருங் காடரங் காவுடை
முத்த னைமுளை வெண்மதி சூடியைச்
சித்த னைச்செம்பொன் அம்பலத் துள்நின்ற
அத்த னையடி யேன்மறந் துய்வனோ (4)

**திருநாவுக்கரசர்**

## திருவாசகம்

## திருக்கோத்தும்பி

பூவேறு கோனும் புரந்தரனும் பொற்பமைந்த

நாவேறு செல்வியும் நாரணனும் நான்மறையும்

மாவேறு சோதியும் வானவரும் தாமறியாச்

சேவேறு சேவடிக்கே சென்றூதாய் கோத்தும்பீ ! (1)

நானார்என் உள்ளமார் ஞானங்களார் என்னை யாரறிவார்

வானோர் பிரான்என்னை ஆண்டிலனேல் மதிமயங்கி

ஊனார் உடைதலையில் உண்பலிதேர் அம்பலவன்

தேனார் கமலமே சென்றூதாய்கோத்தும்பீ! (2)

தினைத்தனை உள்ளதோர் பூவினில்தேன் உண்ணாதே

நினைத்தொறும் காண்தொறும் பேசும்தொறும் எப்போதும்

அனைத்துஎலும்பு உள்நெக ஆனந்தத் தேன்சொரியும்

குனிப்புடை யானுக்கே சென்றூதாய் கோத்தும்பீ! (3)

கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின்

என்னப்பன் என்னொப்பில் என்னையும்ஆட் கொண்டருளி

வண்ணப் பணித்தென்னை வாவென்ற வான்கருணைச்

சுண்ணப்பொன் நீற்றற்கே சென்றூதாய் கோத்தும்பீ ! (4)

**-மாணிக்கவாசகர்**

## திருமந்திரம்

## செல்வம் நிலையாமை

அருளும் அரசனும் ஆனையும் தேரும்
பொருளும் பிறர்கொள்ளப் போவதன் முன்னம்
தெருளும் உயிரொடும் செல்வனைச் சேரில்
மருளும் பினைஅவன் மாதவம் அன்றே. (1)

இயக்குறு திங்கள்இருட்பிழம்பு ஒக்கும்
துயக்குறு செல்வத்தைச் சொல்லவும் வேண்டா;
மயக்கற நாடுமின் வானவர் கோனைப்
பெயல்கொண்டல் போலப் பெருஞ்செல்வ மாமே. (2)

தன்னது சாயை தனக்கு உதவாது கண்டு
என்னது மாடுஎன்று இருப்பர்கள் ஏழைகள்
உன்னுயிர்போம்; உடல் ஒக்கப் பிறந்தது
கண்ணதுகாண்ஒளிகண்டுகொள்ளீரே. (3)

ஈட்டிய தேன்பூ மணம் கண்டு இரதமும்
கூட்டிக் கொணர்ந்துஒரு கொம்பிடை வைத்திடும்
ஓட்டித் துரந்திட்டு அது வலியார்கொளக்
காட்டிக் கொடுத்தது கைவிட்ட வாறே. (4)

- திருமூலர்

## 2. வைணவம்

### பெரியாழ்வார் திருமொழி
### கண்ணனை நீராட அழைத்தல்

கன்றுக ளோடச் செவியில்
கட்டெறும் புபிடித் திட்டால்
தென்றிக் கெடுமாகில் வெண்ணெய்
திரட்டி விழுங்குமா காண்பன்
நின்ற மராமரம் சாய்த்தாய்
நீபிறந் ததிரு வோணம்
இன்று நீ நீராடவேண்டும்
எம்பிரான் ஓடாதே வாராய் ! (1)

கன்றினை வாலோலை கட்டிக்
கனிகள் உதிர எறிந்து
தொடர்ந்து ஓடிஓர் பாம்பைப்
பிடித்துக் கொண்டாட்டினாய் போலும்
நின்திறத் தேனல்லன் நம்பீ
நீபிறந் ததிரு நல்நாள்
நன்றுநீ நீராட வேண்டும்
நாரணா ஓடாதே வாராய் !(2)

- பெரியாழ்வார்

## நாச்சியார் திருமொழி

## சிற்றில்சிதையேல்

இன்றுமுற்றும் முதுகுநோவ
இருந்திழைத்தஇச் சிற்றிலை
நன்றும்கண்ணுற நோக்கி நாங்கொளும்
ஆர்வந்தன்னைத் தணிகிடாய்
அன்றுபாலக னாகிஆலிலை
மேல்துயின்றஎம் ஆதியாய்
என்றுமுன்றனக்கு எங்கள்மேல் இரக்
கம்எழாதது எம்பாவமே. (1)

வட்டவாய்ச்சிறு தூதையொடு
சிறுசுளகும்மண லுங்கொண்டு
இட்டமாவிளை யாடுவோங்களைச்
சிற்றிலீடழித்து என்பயன்
தொட்டுதைத்துநலி யேல்கண்டாய்சுடர்ச்
சக்கரம்கையில் ஏந்தினாய்
கட்டியும்கைத் தாலின்னாமை
அறிதியேகடல் வண்ணனே. (2)

**- ஆண்டாள்**

## பெருமாள்திருமொழி

## காகுத்தன்தாலாட்டு

புண்டரிக மலரதன்மேல் புவனியெல்லாம் படைத்தவனே
திண்டிறலாள் தாடகைதன் உரமுருவச் சிலைவளைத்தாய்
கண்டவர்தம் மனம்வழங்கும் கணபுரத்தென் கருமணியே
எண்டிசையு மாளுடையாய் இராகவனே தாலேலோ. (1)

தாமரைமே லயனவனைப் படைத்தவனே தசரதன்றன்
மாமதலாய் மைதிலிதன் மணவாளா வண்டினங்கள்
காமரங்கள் இசைபாடும் கணபுரத்தென் கருமணியே
ஏமருவும் சிலைவலவா இராகவனே தாலேலோ. (2)

ஆலினிலைப் பாலகனா யன்றுலக முண்டவனே
வாலியைக்கொன் றரசிளைய வானரத்துக் களித்தவனே
காலின்மணி கரையலைக்கும் கணபுரத்தென் கருமணியே
ஆலிநகர்க் கதிபதியே அயோத்திமனே தாலேலோ. (3)

மலையதனா லணைகட்டி மதிலிலங்கை அழித்தவனே
அலைகடலைக் கடைந்தமரர்க்கு அமுதருளிச் செய்தவனே
கலைவலவர் தாம்வாழும் கணபுரத்தென் கருமணியே
சிலைவலவா கேசவனே சீராமா தாலேலோ. (4)

**- குலசேகரஆழ்வார்**

3. **கிறித்தவம்**

**இரட்சணியமனோகரம்**

1. சத்தாய் நிட்களமாய் ஒருசாமிய மும்இலதாய்
சித்தாய் ஆனந்தமாய்த் திகழ்கின்ற திரித்துவமே
எத்தால் நாயடியேன் கடைத்தேறுவன் என்பவந்தீர்ந்து
அத்தா உன்னையல்லால் எனக்கார்துணை யாருறவே. (1) 311

2. எம்மா விக்குருகி உயிரீந்து புரந்ததற்கோர்
கைம்மா றுண்டுகொலோ கடைகாறுங் கையடையாய்
சும்மா ரட்சணைசெய் சொல்சுதந்தரம் யாதுமிலேன்
அம்மான் உன்னையல்லால் எனக்கார்துணை யாருறவே. (2) 312

3. பித்தேறி ச்சுழலும் செகப்பேய்பிடித் துப்பவத்தே
செத்தேன் உன்னருளால் பிழைத்தேன்மறு சென்மமதாய்
எத்தோடங்களையும் பொறுத்தென்றும் இரங்குகவென்று
அத்தா உன்னையல்லால் எனக்கார்துணை யாருறவே. (3) 313

4. துப்பார் சிந்தையிலேன் மறைந்தீட்டிய தொல்வினையும்
தப்பா தேவெளியா நடுநாளெனத் தாங்கிக் கொள்ள
இப்பா ருய்யவென்றே மனுக்கோலமெ டுத்தளங்கள்
அப்பா உன்னையல்லால் எனக்கார்துணை யாருறவே. (4) 314

5. திரைசேர் வெம்பவமாம் கடல்மூழ்கியதீயரெமைக்
கரைசேர்த் துய்க்கவென்றே புணையாயினை கண்ணிலியான்
பரசேன் பற்றுகிலேன் என்னைப்பற்றிய பற்றுவிடாய்
அரசே உன்னையல்லால் எனக்கார்துணை யாருறவே. (1) 317

-ஹெ. ஆ. கிருஷ்ணபிள்ளை

## 4. இசுலாம்

**பராபரக்கண்ணி**

1. ஓடித் திரிந்துஅலைந்தும் உன்பாதம் காணாமல்
வாடிக் கலங்குகிறேன் வாராய் பராபரமே. 574

2. ஐயோ எனக்குஉதவும் ஆதரவை விட்டுவிட்டுத்
தையலரைத் தேடித் தவித்தேன் பராபரமே. 578

3. அடக்க அரிதாம்மாய ஐம்பொறியைக் கட்டிப்
படிக்கப் படிப்பெனக்குப் பகராய் பராபரமே. 583

4. சோற்றுப் பொதியைச் சுமந்தே திரிந்தலைந்தே
ஆற்றாமல் நின்றுகளைத்து அழுதேன் பராபரமே. 587

5. சொல்லரிய ஞானச் சுடரே ஒருவார்த்தை
செல்வம் பொழிந்திடநீ செப்பாய் பராபரமே. 593

6. பொன்னால் மயக்கெடுத்துப் புத்திகெட்டு நானெனவே
பன்னாளும் நின்றால் பலனோ பராபரமே. 606

7. காசாசை கொண்டு கலங்கியே கெட்டலைந்தே
தோசியாய் நின்றேன் துணையே பராபரமே. 612

8. தன்னை யறிந்துஉணரத் தலையாய்ஒருவார்த்தை
இன்னபடி என்றே இயம்பாய் பராபரமே. 621

9. வேசந் தனைப்போட்டு வேதாந்த சாத்திரத்தைக்
காசு பணம்பறிக்கக் கற்றேன் பராபரமே. 657

10. மாளா மயக்கறுத்து மனக்கறையைத் தான்கழுவி
ஆளாக்கிக் கொள்வாயென் ஐயா பராபரமே. 659

குணங்குடி மஸ்தான் சாகிபு

## 5. நீதிநூல்கள்

### 1. திருக்குறள்

**கள்ளுண்ணாமை**

1. உட்கப் படாஅர் ஒளியிழப்பர் எஞ்ஞான்றும்
கட்காதல் கொண்டொழுகு வார்.

2. உண்ணற்க கள்ளை உணில்உண்க சான்றோரான்
எண்ணப் படவேண்டா தார்.

3. ஈன்றாள் முகத்தேயும் இன்னாதால் என்மற்றுச்
சான்றோர் முகத்துக் களி.

4. நாண்என்னும் நல்லாள் புறங்கொடுக்கும் கள்ளென்னும்
பேணாப் பெருங்குற்றத் தார்க்கு.

5. கையறி யாமை உடைத்தே பொருள்கொடுத்து
மெய்யறி யாமை கொளல்.

6. துஞ்சினார் செத்தாரின் வேறல்லர் எஞ்ஞான்றும்
நஞ்சுண்பார் கள்ளுண் பவர்.

7. உள்ளொற்றி உள்ளூர் நகப்படுவர் எஞ்ஞான்றும்
கள்ளொற்றிக் கண்சாய் பவர்.

8. களித்தறியேன் என்பது கைவிடுக நெஞ்சத்து
ஒளித்ததூஉம் ஆங்கே மிகும்.

9. களித்தானைக் காரணம் காட்டுதல் கீழ்நீர்க்
குளித்தானைத் தீத்துரீஇ அற்று.

10. கள்ளுண்ணாப் போழ்திற் களித்தானைக் காணுங்கால்
உள்ளான்கொல் உண்டதன்சோர்வு.

**திருவள்ளுவர்**

## 2. நாலடியார்

**நட்பாராய்தல்**

யானை அனையவர் நண்பொறீஇ நாயனையார்

கேண்மை கெழீஇக் கொளல் வேண்டும் ; - யானை

அறிந்தறிந்தும் பாகனையே கொல்லும் ; எறிந்தவேல்

மெய்யதா வால் குழைக்கும் நாய். (1)

கோட்டுப்பூப் போல மலர்ந்து பின் கூம்பாது

வேட்டவேட்டதாம்நட்புஆட்சி; தோட்ட

கயப்பூப் போல்முன் மலர்ந்துபின் கூம்புவாரை

நயப்பாரும் நட்பாரும் இல். (2)

கடையாயர் நட்பில்கமு கனையர் ; ஏனை

இடையாயர் தெங்கின் அனையர் ; தலையாயார்

எண்ணரும் பெண்ணைபோன்று இட்டஞான்று இட்டதே

தொன்மை உடையார் தொடர்பு. (3)

நாய்க்கால் சிறுவிரல் போல்நன்கு அணியர் ஆயினும்

ஈக்கால் துணையும் உதவாதார் நட்பு என்னாம் ?

சேய்த்தானும் சென்றுகொளல் வேண்டும் செய்வினைக்கும்

வாய்க்கால் அனையார் தொடர்பு. (4)

**- சமணமுனிவர்கள்**

## 3. இனியவைநாற்பது

கயவரைக் கைகழிந்து வாழ்தல் இனிதே
உயர்வுள்ளி ஊக்கம் பிறத்தல் இனிதே
எளியர் இவரென்று இகழ்ந்துரையா ராகி
ஒளிபட வாழ்தல் இனிது. (1)

பிச்சைபுக் குண்பான் பிளிறாமை முன்இனிதே
துச்சி லிருந்து துயர்கூரா மாண்பினிதே
உற்றபே ராசை கருதி அறனொடூஉம்
ஒற்கம் இலாமை இனிது. (2)

**- பூதஞ்சேந்தனார்**

## 4. இன்னாநாற்பது

நட்டார் இடுக்கண்கள் காண்டல் நனியின்னா;
ஒட்டார் பெருமிதம் காண்டல் பெரிதின்னா;
கட்டிலா மூதூர் உறைவின்னா; ஆங்கின்னா
நட்ட கவற்றினால் சூது. (1)

அடக்கம் உடையவன் மீளிமை இன்னா;
தொடக்கம் இலாதவன் தற்செருக்கு இன்னா;
அடைக்கலம் வவ்வுதல் இன்னா; ஆங்கின்னா
அடக்க அடங்காதார் சொல். (3)

- கபிலர்

## 5. பழமொழி

மறுமனத்தன் அல்லாத மாநலத்த வேந்தன்
உறுமனத்த னாகி ஒழுகின் - செறுமனத்தார்
பாயிரம் கூறிப் படைதொக்கால் என்செய்ப?
ஆயிரம் காக்கைக்கோர் கல். (1)

உற்றான் உறாஅன் எனல்வேண்டா ஒண்பொருளைக்
கற்றானை நோக்கியே கைவிடுக்க - கற்றான்
கிழவனுரை கேட்கும் கேளான் எனினும்
இழவன்று எருதுண்ட உப்பு. (2)

இரப்பவர்க்(கு) ஈயக் குறைபடும் என்றெண்ணிக்
கரப்பவர் கண்டறியார் கொல்லோ - பரப்பிற்
துறைத்தோணி நின்றுலாம் தூங்குநீர்ச் சேர்ப்ப!
இறைத்தோறும் ஊறும் கிணறு. (3)

முன்னும் ஒருகால் பிழைப்பானை ஆற்றவும்
பின்னும் பிழைப்பப் பொறுப்பவோ? - இன்னிசை
யாழின் வண்டார்க்கும் புனலூர! ஈனுமோ
வாழை இருகால் குலை? (4)

- **முன்றுறையரையனார்**

## இரண்டாம்பருவம்- இலக்கணப்பகுதி

### அ. சொல்இலக்கணம்

1. சொல்லின்பொதுஇலக்கணம்.

2. பெயர்ச்சொல் – அறுவகைப்பெயர்கள் – ஆகுபெயர்.

3. வினைச்சொல்லின்பொதுஇலக்கணம் – வகைகள் – வினைமுற்று, பெயரெச்சம், வினையெச்சம் – ஏவல்வினைமுற்று – வியங்கோள்வினைமுற்று.

4. இடைச்சொல்லின்பொதுஇலக்கணம் – ஏகாரஇடைச்சொல், ஓகாரஇடைச் சொல், உம்மைஇடைச்சொல்.

5. உரிச்சொல்.

### ஆ. மொழிப்பயிற்சி

1. வழூஉச்சொற்களும், திருந்தியசொற்களும்
2. கடிதங்கள் (வேண்டுதல், முறையீடு, விண்ணப்பம்)

## வழூஉச்சொற்களும், திருந்திய சொற்களும்

எழுத்து, பொருள் தரும் நிலையில் சொல்லாகும் தகுதியினைப் பெறுகின்றது. மொழியில் சொற்களைப் பயன்படுத்தும்போது சொற்குற்றம் ஏற்படுதல் கூடாது. வழக்கில் காணப்படும் வழூஉச்சொற்களைக் கண்டறிந்து அதற்கு இணையான திருந்திய சொற்களை அறிந்து கொள்ளுதல் என்பது தற்காலத்தில் இன்றியமையாத ஒன்றாகக் கருதப்படுகின்றது. சொற்களில் காணப்படும் வழூஉச் சொற்களும் திருந்திய சொற்களும் பின்வருமாறு தரப்பட்டுள்ளன.

| வ.எண். | வழூஉச் சொற்கள் | திருந்திய சொற்கள் |
|---|---|---|
| 1. | அஞ்சு | ஐந்து |
| 2. | அடமானம் | அடைமானம் |
| 3. | அடமழை | அடைமழை |
| 4. | அருகாமையில் | அருகில் |
| 5. | அவைகள் | அவை, அவற்றை |
| 6. | அதுகள் | அவை |
| 7. | ஆம்படையாள் | அகமுடையாள் |
| 8. | அண்ணாக்கயிறு | அரைஞாண்கயிறு |
| 9. | அது அல்ல | அது அன்று |
| 10. | அவன் அல்ல | அவன் அல்லன் |
| 11. | இடது பக்கம் | இடப்பக்கம் |
| 12. | உசிர், உசிரு | உயிர் |
| 13. | உடமை | உடைமை |
| 14. | உடம்படிக்கை | உடன்படிக்கை |
| 15. | உத்திரவு | உத்தரவு |
| 16. | ஊரணி | ஊருணி |
| 17. | எலிமிச்சை | எலுமிச்சை |

| | | |
|---|---|---|
| 18. | எல்லோரும் | எல்லாரும் |
| 19. | எளக்காரம் | இளக்காரம் |
| 20. | என்னமோ | என்னவோ |
| 21. | ஏற்கனவே | ஏற்கெனவே |
| 22. | ஏமாந்து | ஏமாறி |
| 23. | ஐநூறு | ஐந்நூறு |
| 24. | ஒண்டியாய் | ஒன்றியாய் |
| 25. | கடப்பாறை | கடப்பாரை |
| 26. | கட்டிடம் | கட்டடம் |
| 27. | கத்திரிக்காய் | கத்தரிக்காய் |
| 28. | கத்திரிக்கோல் | கத்தரிக்கோல் |
| 29. | கம்பிளி | கம்பளி |
| 30. | கயறு | கயிறு |
| 31. | கருவப்பிலை | கறிவேப்பிலை |
| 32. | கருப்பட்டி | கருப்புக்கட்டி |
| 33. | காக்கை | காக்கா |
| 34. | கிடா | கடா (ஆட்டுக்கடா) |
| 35. | கீத்து | கீற்று |
| 36. | குண்டுமணி | குன்றிமணி |

| | | |
|---|---|---|
| 37. | குதவளை | குரல்வளை |
| 38. | கூறைவீடு | கூரைவீடு |
| 39. | கைமாறு | கைம்மாறு |
| 40. | கொழம்பு | குழம்பு |
| 41. | கோர்வை | கோவை |
| 42. | சமயல் | சமையல் |
| 43. | சவதி | சகதி |
| 44. | சாயங்காலம் | சாயுங்காலம் |
| 45. | சித்திரிப்பு | சித்தரிப்பு |
| 46. | சிலது | சில |
| 47. | சீயக்காய் | சீகைக்காய் |
| 48. | சுடு தண்ணீர் | வெந்நீர் |
| 49. | சுவற்றில் | சுவரில் |
| 50. | செரங்கு | சிரங்கு |
| 51. | சேதி | செய்தி |
| 52. | சோம்பேரி | சோம்பேறி |
| 53. | தங்கச்சி | தங்கை |
| 54. | தமயன் | தமையன் |
| 55. | தலகாணி | தலையணை |

| | | |
|---|---|---|
| 56. | தாவாரம் | தாழ்வாரம் |
| 57. | துகையல் | துவையல் |
| 58. | துடப்பம் | துடைப்பம் |
| 59. | துடை | தொடை |
| 60. | துறவுகோல் | திறவுகோல் |
| 61. | துளிர் | தளிர் |
| 62. | தேனீர் | தேநீர் |
| 63. | தொந்திரவு | தொந்தரவு |
| 64. | தொளாயிரம் | தொள்ளாயிரம் |
| 65. | நஞ்சை | நன்செய் |
| 66. | நல்லெண்ணை | நல்லெண்ணைய் |
| 67. | நாகரீகம் | நாகரிகம் |
| 68. | நாநூறு | நானூறு |
| 69. | நேத்திக்கடன் | நேர்த்திக்கடன் |
| 70. | நொங்கு | நுங்கு |
| 71. | நோம்பு | நோன்பு |
| 72. | பசும்பால் | பசுப்பால் |
| 73. | பயிறு | பயறு |
| 74. | பன்னிரெண்டு | பன்னிரண்டு |

| | | |
|---|---|---|
| 75. | புடவை | புடைவை |
| 76. | புட்டு | பிட்டு |
| 77. | புண்ணாக்கு | பிண்ணாக்கு |
| 78. | புழக்கடை | புறக்கடை |
| 79. | பூளை | பீளை |
| 80. | பூசனிக்காய் | பூசணைக்காய் |
| 81. | பொண்டாட்டி | பெண்டாட்டி |
| 82. | பொம்பிளை | பெண்பிள்ளை |
| 83. | மறுவீடு | மருவீடு |
| 84. | மாதா மாதம் | மாதந்தோறும் |
| 85. | மானாமாரி | வானாவாரி |
| 86. | மிரட்டினார் | மருட்டினார் |
| 87. | மிரண்டு | மருண்டு |
| 88. | முகர்தல் | மோத்தல் |
| 89. | முயற்சித்தார் | முயன்றார் |
| 90. | முழுங்கு | விழுங்கு |
| 91. | முனி | நுனி |
| 92. | முன்னூறு | முந்நூறு |
| 93. | மென்மேலும் | மேன்மேலும் |

| | | |
|---|---|---|
| 94. | வத்தல் | வற்றல் |
| 95. | வயறு | வயிறு |
| 96. | வலதுகை | வலக்கை |
| 97. | விரால்மீன் | வரால்மீன் |
| 98. | வெள்ளாமை | வேளாண்மை |
| 99. | வேக்குரு | வேர்க்குரு |
| 100. | 2016-ம் ஆண்டு | 2016-ஆம் ஆண்டு |
| 101. | 5-ம், 6-வது | ஐந்தாம், ஆறாவது -5ஆம்,<br>6-ஆவது |

**இலக்கிய வரலாறு**

**நீதி நூல்களும், பக்தி இலக்கியங்களும்**

1. பதினென்கீழ்க்கணக்கு நூல்கள் (அறநூல்கள் மட்டும்)
2. பன்னிரு திருமுறைகள்
3. நாலாயிர திவ்ய பிரபந்தம்